ஏற்பாடு செய்திருந்தது. அந்தத் திட்டம் என்னவாயிற்று ? அதன்கீழ் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதைச் செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்—முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

பூந்தமல்லி குருடர் பள்ளி மாணவர்கள் நச்சுக்கலந்த உணவால் பாதிக்கப்பட்டது.

Mr. SPEAKER : The hon. Member, Thiru J. James has given notice of an adjournment motion.

Thiru J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion under Rule 42 of the Madras Legislative Assembly Rules :—

'That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance namely, the food poisoning which affected hundreds of students of the Government School for the Blind at Poonamallee on 3rd March 1968.'

தலைவரவர்களே, பூந்தமல்லி அரசாங்கக் குருடர் பள்ளிக்கூடத்தில் பயிலும் மாணவர்களில் 100 பேர் கடந்த 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று இரவு விஷம் கலந்த பதார்த்தங்களைச் சாப்பிட்டதால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலரின் நிலைமை இன்றும் மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது. இது சாதாரண விஷயம் அல்ல. பொதுவானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரச்சினை என்பதில் சந்தேகமில்லை. இந்த மாணவர்கள் கலப்படம்செய்யப்பட்ட கடலை எண்ணெயினால் தயார் செய்யப்பட்ட பதார்த்தங்களைச் சாப்பிட்டதாகவும், அதனால் அவர்கள்—பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வதந்திகள் நிலவுகின்றன. கடலையெண்ணெய் விலை சரிந்த பொருட்களில் ஒன்று. அதனால் கடலையெண்ணெயில் கலப்படம் செய்யப்பட்டிருக்கும் என்று தெரிகிறது. இந்நிலையில் பொதுவானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான இதைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு உள்ள பிரச்சினை அல்ல இது. அன்றாட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கத்தக்க, எடுக்க வேண்டிய பிரச்சினையாகும். 1968-ம் ஆண்டு மார்ச மாதம் 3-ம் தேதியன்று மாலை 6½ மணிக்கு பூந்தமல்லி குருடர் பள்ளியில் இருப்பவர்களுக்கு உணவு வழங்கப்பட்ட நேரத்தில் வாந்திபேதி வந்த காரணத்தால் 91 பேர் சென்னை மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட வேண்டுமென்று அங்குள்ள டாக்டர்கள் கூறிய ஆலோசனையின் பேரில் அவர்கள் பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். 91 பேர் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு இரவு ஒரு மணி வரையிலும் அவர்களுக்கு தக்க சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. மறுநாள் 4 பேர் சேர்க்கப்பட்டனர். ஆக மொத்தம் 95 பேர்கள் சேர்க்கப்பட்டனர். அதில் 52 பேர் நலமுற்று திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள். மற்றவர்களும் நலமுற்று திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள் என்று செய்திகள் கொடுத்திருக்கிறார்கள். யாருக்கும் அபாயம் ஏற்படும் சூழ்நிலை இல்லை. எதன் காரணமாக அது நேர்ந்திருக்கக்கூடும் என்பதுப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல்துறை தலைமை அதிகாரியும் உடனே பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் பேரிலே சுகாதார அதிகாரி

யும் சென்று நச்சுக்கலப்பு எப்படி ஏற்பட்டிருக்கும் என்று ஆராய்கிறார்கள். வாந்தி பேதி உண்டானதை வைத்துக்கொண்டு அந்த வகையான நச்சு எப்படிக் கலந்திருக்கும் என்று அரசு ஆராய்கிறது. அந்தப் பகுதியின் இடத்தையும், மற்றவற்றையும் சுகாதாரத் தலைமை அதிகாரி பார்வையிட்டிருக்கிறார்கள். அன்று சோறும், சாம்பாரும், முட்டைக்கோஸும், சோயா பீன்ஸ் பவுடரும் கலந்து சாப்பாடு போடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தப் பவுடர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய முழு விவரங்களும், நச்சுக்கலப்பு எப்படி ஏற்பட்டது என்பது பற்றியும் அறிக்கையின் மூலம்தான் தெரியவேண்டியிருக்கும். இதுபற்றிவிவாதப்பதற்காக அவையின் அன்றாட நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கிற காரணத்தாலும், திரு. ஜேம்ஸ் அவர்களுக்குப் பொது விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு.

மின்சார வாரிய ஊழியர்களுக்கு, அரசாங்க ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட கிராக்கிப்படியும், நகர ஈட்டுப்படியும் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ந. வீராசாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ந. வீராசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களுக்கு சமீபத்தில் உயர்த்தப்பட்ட கிராக்கிப்படியையும், நகர ஈட்டுப்படியையும் (C. C. A.) மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அளிக்கவேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, the Member has invited the attention of the Government to the need for permitting the employees of the Madras State Electricity Board to draw the recent increase in Dearness Allowance and City Compensatory Allowance granted to Government servants.

At the outset it must be pointed out that under Section 79 (c) of the Electricity (Supply) Act, 1948, the Madras State Electricity Board has full powers to make regulations with regard to salaries, allowances and other conditions of service pertaining to the staff under its control and under section 78-A of the Act, the Government have powers to give directions to the Board in regard to the discharge of its duties only on questions of policy. The primary responsibility in regard to the grant of the Dearness Allowance rests with the Madras State Electricity Board and the part played by the Government is purely advisory. However, I am making this statement with reference to the facts of the case.

The Madras State Electricity Board has been sanctioning Dearness Allowance to its employees on the same scales as the Government of Madras have been sanctioning to their employees from time to time. In G.O. Ms. No. 971, Finance, dated 17th October 1967, the Government sanctioned an increase in Dearness